ஆழி சர்வதேச தமிழிலக்கிய ஆய்விதழ்
Aazhi International Journal of Tamil Literature Studies
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
E-ISSN: 2583-7931
OPEN ACCESS

# Places of Worship in Tenth

# பத்துப்பாட்டில் வழிபாட்டிடங்கள்

S. Manimegalai
*Assistant Professor, Department of Tamil, Marudhar Kesari Jain College for Women, Vaniyambadi, India*
**ச. மணிமேகலை**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி, வாணியம்பாடி, இந்தியா*

***Article Info:***

Received 15-04-2023 | Accepted 30-05-2023 | Published 16-06-2023
Volume 01 Issue 02 July 2023 | Page No : 12-16

**ABSTRACT**

Belief in God is rooted and established among the people. Man is by nature to live in conflict with nature. Therefore, worship and places of worship become one and the same with Him. People saw the divine in the natural forces around them. Deities are believed to reside in forest, mountain, water, wood, land, sea, stone, etc. Here and there, the tenets of the scriptures point out the divine food and rituals which are essential for the life of the people.

***Keywords:***

*Worship of Anangu, Koravai, Nadukal, Ka, Nagar worship*

## முன்னுரை

தெய்வ நம்பிக்கை என்பது மக்களிடையே தொன்றுதொட்டு வேரூன்றித் தொடர்ந்து நிலைபெற்று வருகின்றது. மனிதன் இயற்கையோடு போராடி வாழும் இயல்புடையவன். ஆகையால் வழிபாடும் வழிபாட்டிற்குரிய இடங்களும் அவனோடு இரண்டறக் கலந்த ஒன்றாகவே அமைகின்றது. மக்கள் தங்களைச் சுற்றியுள்ள இயற்கைச் சக்திகளில் தெய்வத்தைக் கண்டனர். காடு, மலை, நீர், மரம், நிலம், கடல், கல், முதலியவற்றில் தெய்வங்கள் உறைவதாக நம்பியுள்ளனர். மக்களது வாழ்விற்கு இன்றியமையாத தெய்வ உணர்வுகளையும், வழிபாட்டு நெறிகளையும் ஆங்காங்கே பத்துப்பாட்டு நூல்கள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் கொற்றவை வழிபாடும், நடுகல் வழிபாடும் அத்தெய்வங்களின் வழிபாட்டிற்குரிய இடங்கள் குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களில் காணக்கூடிய ஒன்றாகும். உருவ வழிபாட்டிற்கு அடிப்படையாக அமையும் கடவுள் வழிபாட்டையும், அக்கடவுளர்கள் இருக்கக்கூடிய இடங்களைக் குறித்து ஆராய்வதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

## இறை வழிபாடு

வழிபாடு என்னும் சொல்லிற்கு ‘வணங்குதல்’, ‘பின்பற்றுதல்’ என இருவேறு பொருள்கள் உள்ளன. வழிபாடு என்பது ‘வழியிற்படுதல்’ அல்லது ‘ஒரு வழிப்படுதல்’ என்பது பொருளாகும் தமிழ் அகராதி வழிபாடு என்ற சொல்லிற்கு ‘வழியிற் செல்லுகை’, ‘பின்பற்றுகை’, ‘வணங்குதல்’ என முப்பொருளை உரைக்கிறது. அலைந்து திரியும் மனதை ஒரு நிலையில் நிறுத்தி ஒரே வழியில் நிலைபெறச் செய்வதே வழிபாடாகும்.

“வழிபாடு என்பதன் சொற்பொருள் கடவுள் வழியில், கடவுள் நெறியிற்படுதல் அல்லது செல்லுதல் என்பதாகும்” என்றும்,

**“வழிபாடு என்பது நாம் வழிபடும் கடவுள் பற்றி மனத்தான் பாவித்துப் புறத்தொழில் எதுவுமின்றி மனத்தால் வழிபடுதல்”** என்ற கருத்தையும் கோ. தண்டபாணி பிள்ளை கூறியுள்ளார்.

**“வழிபாடு என்பது சிந்தனை, புத்தி, மனம் ஆகியவை ஒருங்கிணைத்து ஒரு வழியிற் செல்லுதல்”** என்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் ‘வழிபாடு’ என்பதன் பொருளை விரிவாகக் கூறியுள்ளதைக் காணலாம்.

எல்லாப் பொருள்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு மாபெரும் சக்தி உள்ளதாக உணர்ந்த மனிதன், பல்வேறு வகையான வழிபாட்டு முறைகளையும், வழிபாட்டிற்குரிய இடங்களாக கண்டறிந்து வந்துள்ளான். அவ்விடங்களைக் குறித்து சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

வழிபாடு என்ற சொல் ‘வழிபாடு’ என்னும் சொல்லிலிருந்து தோன்றியதாகும். ஒரு செயலைச் செய்வதற்கு முன்பும், தான் நினைத்த காரியம் (அ) செயலானது நிறைவேறுவதற்கும் இறைவனை வழிபாடு செய்யக்கூடிய நிலையானது ஏற்பட்டது.

நிலங்களின் இயற்கை அமைப்பை ஒட்டி அவற்றை நான்காகவும், பின் ஐந்தாகவும் பகுத்தனர். அவ்வந்நில மக்களின் இயற்கைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப நிலத் தெய்வங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவ்வந் நிலத்தில் வாழ்கின்ற மக்களின் தொழில் நிலைக்கு ஏற்பவே திணை நிலத் தெய்வங்கள் அமைந்துள்ளமையை அறிய முடிகின்றது. மருத நிலத்து மக்கள் பயிரிடும் தொழிலுக்குத் துணையாக இந்திரனை வழிபட்டனர்.

காடு வாழ் மக்கள் கால்நடை வளர்ப்புக்கு ஏற்பத் திருமாலையும், நீர்வழி உணவு பெறும் பரதவர்கள் வருணனையும், வேட்டுவர்கள் முருகனையும் தெய்வமாகக் கொண்டனர். இத்தகைய இயற்கைச் சூழலில் வழிபாடும் இயற்கையாக மேற்கொள்ளப்பட்டிருந்ததை அறிய முடிகின்றது. தமக்கு அச்சத்தை விளைவித்த பல பொருள்களும், பெருஞ்சக்தி படைத்தன என்று நம்பியுள்ளனர். இதனால் மலை, காடு, மரம், கடல் முதலியவற்றில் தெய்வங்கள் உறைவதாக நம்பி வழிபாடு செய்துள்ளனர்.

### இயற்கை வழிபாட்டிடங்கள்

சங்க கால மக்கள் இயற்கையில் இருந்து தன்னை வேறுபடுத்தி கொண்டு வளர்ச்சியடைந்த போது இயற்கையையே கடவுளாகக் கருதி வழிபட வேண்டிய சூழல் ஏற்பட்டது. எனவே தான் ஐந்திணை நிலப் பரப்பில் மலை, காடு, நீர்நிலைகள் கடல் சார்ந்து வாழ்ந்து வந்த சங்க காலத்து மக்கள் மரங்கள், மலை முகடுகள், சுனைகள், கடல்கரை, ஆட்கள் புழக்கமற்ற காடுகள், இரவு நேரம் போன்றவற்றில் கண்களுக்குப் புலப்படாத சக்திகள், உறைந்திருப்பதாக நம்பினர்.

ஆகையால் மக்கள் தங்களைச் சுற்றிலும் அமைந்துள்ள இயற்கை வனப்புகளில் தெய்வத்தை வழிபட்டுள்ளனர். அருவே, உருவ வழிபாட்டு முறையும், வழிபாட்டிற்குரிய இடங்கள் தமிழர்களிடையே இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

சங்க கால மக்கள் காடு, மலை, மரம், நீர், கடல் முதலிய இடங்களிலும், முச்சந்தி, நாற்சந்தி, ஐஞ்சந்திகளிலும் இறைவனை வழிபட்டுள்ளனர். மேலும், அம்பலத்திலும், மரக்கட்டையிலும் இறைவனின் வழிபாட்டிடமாக கருதியதை,

**"காடும் காவும் கவின்பெறு துருத்தியும்**
**யாறும் குளனும் வேறுபல் வைப்பும்"** **(திருமுருகு. 223 – 224)**

வரும் பாடலடிகளால், இறைவன் எல்லா இடங்களிலும் உறைவதனால் வழிபாடு நிகழ்த்தியதைக் குறித்து அறியலாம். மேலும் பதிற்றுப்பத்தில்,

**"மலையும் மரமும் மரம்செற் காலம்**
**காடும் மேடும் கள்ளியும் புதரும்**
**சுனையும் துருத்தியும் சுழியும் கடலும்**
**நாடும் ஊரும் நல்மனை இடங்களும்**
**உவந்துறை கடவுளர் காட்சியும் உளவே"** **(பதிற்றுப். 21)**

என்னும் பாடல் வரிகளில் மூலம் மக்கள் தாம் கண்ட பொருள்கள் யாவற்றையும் தெய்வத்திற்கு நிகராகப் போற்றியதும், அவைகளின் மூலம் தெய்வத்தைக் கண்டத்தையும் உணர முடிகிறது. மலை, காடு, மரம், சுனை, ஆற்றிடைக்குறை, கழி, கடல், யாழ், முரசு, ஆயதம் முதலிய இடங்களிலும் தெய்வம் உறையும் இடங்களாக நம்பியுள்ளனர்.

### அணங்கு உறையும் இடங்கள்

அணங்கு என்பதற்கு "அச்சம், தெய்வப் பெண், தேவர்களாடும் கூத்து" எனப் பல பொருள்களைத் தருகிறது தமிழ்மொழி அகராதி.

**"அணங்கென்பன பேயும் பூதமும்**
**பாம்பும் ஈறாகிய பதினெண்**
**கணனும், நிரய பாலரும் பிறரும்**
**அணங்குதற் றொழிலராகிய**
**சவத்தின் பெண்டிர் முதலாயினாரும்**
**உருமிசைத் தொடக்கத்தைவும்"** **(தமிழ் அகராதி. 46)**

எனப்படும் எனத் தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரையில் பேராசிரியர் சுட்டுகிறார். அணங்கு என்பதற்கு 'இணங்குதல்' என்னும் பொருளும் உண்டு. அச்ச உணர்வைத் தூண்டிப் பிறரைத் தம் வயத்தில் இணங்கச் செய்யும் பொருளனைத்தையும் முன்னோர்கள் அணங்கு எனக் குறித்ததாகவும் கொள்ளலாம்.

அணங்கு, சூர், சூலி, முருகு போன்ற கடவுள்கள் இயற்கை சார்ந்த இடங்களில் தங்கி இருப்பதற்கான நம்பிக்கை சங்க காலத்தில் அதிகமாக நிலவியது எனலாம். அணங்கு என்பது தெய்வங்களையும், அத்தெய்வத்தால் ஏற்படும் அச்சத்தையும் குறிக்கிறது.

அச்சம், வருத்தம் என்று பொருள் தருகின்ற வகையில் அணங்கு, பேய், சூர் போன்ற பெயர்களால் கடவுள்கள் குறிக்கப்பட்டாலும், அவற்றின் பேராற்றல் காரணமாகத்தான் வணங்கப்பட்டன.

அணங்கு, வரையர்மகளிர், சூர் போன்ற ஆற்றல்கள் குறிப்பாகப் பெண்களைப் பிடித்துக்கொண்டு அவர்களுடைய உடலினை மெலிவித்துக் கேடு செய்கின்றனவாகக் கருதப்பட்டன. அதன் காரணமாகவும் அணங்கை வழிபாடு செய்தனர் எனலாம். பெரும்பாலும் இலக்கியங்களில் அணங்கு என்பதற்கு தெய்வத்தையே பொருளாகக் காட்டி விளக்கியுள்ளார்கள். இதனை,

**"அணங்கு சால் உயர்நிலை தழீஇ பண்டைதன்"** **(திருமுருகு. 289)**

**"அணங்கு மெய் நின்ற அமைவரு காட்சி"** **(பொருநர். 20)**

**"அணங்கு என உருத்த சுணங்கு அணி ஆகத்து"** **(பொருநர். 35)**

**"ஆளி நன் மான் அணங்கு உடை குருளை"** **(பொருநர். 139)**

**"அணங்கு உடை யாளி தாக்கலின் பல உடன்"** **(பொருநர். 258)**

**"துணங்கை அம் செல்விக்கு அணங்கு நொடித்து ஆங்கு"** **(பொருநர். 459)**

**"கின்னரம் முரலும் அணங்குடை சாரல்"** **(பொருநர். 494)**

என்னும் பாடலடிகளில், அணங்கு என்பது தெய்வத்தை குறிப்பதாக அறிய முடிகின்றது. மேலும்,

**"ஆண் தலை அணங்கு அடுப்பின்"** **(மதுரைக். 29)**

**"அஞ்சுவர தட்கும் அணங்கு உடை துப்பின்"** **(மதுரைக். 140)**

**“அணங்கு வழங்கும் அகல் ஆங்கண்”** **(மதுரைக். 164)**

**“தொல் வலி நிலை இய அணங்குடை நெடுநிலை”** **(மதுரைக். 353)**

**“அணங்கு வீழ்வு அன்ன பூ தொடி மகளிர்”** **(மதுரைக். 446)**

**“மணம் புணர்ந்து ஓங்கிய அணங்கு உடை தோட்டி”** **(மதுரைக். 693)**

என்னும் பாடலடிகளில், வீரரது தலை நோக்குவாரை அணங்குறுத்தும் அதாவது துன்புறுத்தும் அடுப்பாக உருவகிக்கப் பெற்றுள்ளது. ஆங்குச் சினமென்னும் நெருப்பில், பகைவர் குருதியாகிய உலை கொதித்துப் பொங்கும் என்று உருவகப்படுத்தி உரைக்கின்றார் புலவர் மேலும், பகைவரை வழிசெல்ல விடாது துன்புறுத்தலின் அரணிடத்துள்ள பெரிய வாயிற் கதவுகளின் ‘வலிமைத் தன்மை’ பகைவர்களுக்கு அணங்காகிய நிலை சுட்டப்பெறுகின்றது. மேலும், கண்களாற் புலனாகாத அணங்குகள் உறையும் இடங்களாக இலக்கியங்கள் சிலவற்றைச் சுட்டுகின்றன.

**“பொறிப்பூம் புன்கி னெழில்தகை யண்முறி**
**சுணங்கணி வனமுலை அணங்கு கொளத்திமிரி”** **(நற். 9 : 5 – 6)**

என்ற அடிகளில் மார்பின்கண் உறையும் வீற்று தெய்வம் சிறப்போடு விளங்கும்படி புன்கினது தளிரைப் பெண்கள் தம் மார்பில் பூசிய செய்தியைக் கூறுகிறது. இங்கு வீற்று தெய்வம் அணங்கெனவே சுட்டப்படுகிறது.

மேலும் இயற்கை வளம் சூழ்ந்த மலைகளில் அணங்கு உறைவதை அகநானூறுப் பாடல்கள் உணர்த்துகின்றன. இதனை,

**“அணங்கு உடை நெடு வரை உச்சியின் இழி தரும்”** **(அகம். 22 : 1)**

**“ஆடு கழை நரலும் அணங்கு உடை கவாஅன்”** **(அகம். 72 : 11)**

**“அணங்கு டை நோன் சிலை வணங்க வாங்கி”** **(அகம். 159 : 6)**

**“ஆஅய் நன் நாட்டு அணங்குடை சிலம்பில்”** **(அகம். 198 : 14)**

**“அருவி தந்த அணங்குடை நெடும் கோட்டு”** **(அகம். 272 : 3)**

**“அணங்குடை உயர் நிலை பொருப்பின் கவாஅன்”** **(அகம். 338 : 6)**

**“அணங்குடை வரைப்பின் பாழி ஆங்கண்”** **(அகம். 372 : 3)**

**“அணங்குடை யாளி தாக்கலின் பல உடன்”** **(பெரும். 258)**

**“அரு நிலை உயர் தெய்வத்து அணங்கு சால் தலை காக்கும்”** **(பரிப். 9 : 2)**

என்னும் அடிகளில், அணங்கு என்பது இயற்கை வளம் சார்ந்த மலைப்பகுதயில் உறையும் தெய்வமாக கருதப்படுகின்றது.

கடற்றுரையில் உறையும் தெய்வமாக அணங்கை கீழ்வரும் பாடல்கள் சுட்டுக்கின்றன.

**“அணங்கு உடை பனிதுறை தொண்டி அன்ன”** **(ஐங்குறு. 174 : 1)**

**“அணங்கு உடை முந்நீர் பரந்த செறுவின்”** **(அகம். 207 : 1)**

**“அணங்கு உடை பனிதுறை கைதொழுது ஏத்தி”** **(அகம். 240 : 8)**

நீராடுந்துறையிலும், ஊருணித்துறையிலும் அணங்கு தெய்வமாக உறைந்துள்ளதை,

**“உண்துறை அணங்கு இவள் உறை நோய் ஆயின்”** **(ஐங்குறு. 28 : 1)**

என்றும்,

நீர்நிலைகளிலும், வெற்றியின் அடையாளமாக விளங்கும் காவற்கடம்புகளிலும் அணங்கு உறைவதை,

**“அணங்கு உடை கடம்பின் முழு முதல் தடிந்து”** **(பதிற்று. 88 : 6)**

என்றும், யாழ்களின் வழியேயும் அணங்கு உறைவதை,

**“மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன**
**அணங்கு மெய்ந் நின்ற அமைவரு காட்சி”** **(பொருநர். 19 – 20)**

என்ற அடிகளிலும், தந்தக் கட்டில், யானையின் மத்தகம், சுரவின் கொம்பு, இல்லங்கள், அரண்மனை வாயில் நிலைகள் போன்ற இடங்களிலெல்லாம் அணங்குகள் விரும்பி உறைவதை,

**“அணங்கு உடை இரும் தலை நீவலின் மதன் அழிந்து”** **(குறுந். 308 : 2)**

என்ற அடியில், யானையின் மத்தகத்தில் அணங்கு உறைவதை குறுந்தொகை பாடல் வழி அறியலாம்.

**"அணங்கு உடை மரபின் கட்டில் மேல் இருந்து"** **(பதிற்று. 79 : 4)**

**"சினைச்சுறவின் கோடுநட்டு**
**மனைச் சேர்த்திய வல்லணங்கினான்**
**மடற்றாழை மலர் மலைந்தும்"** **(பட்டினப். 86 – 88)**

என்னும் பாடலடிகளில், பெரிய சுறாமீனின் கொம்பினை மணற்பரப்பில் ஊன்றி அதில் வளமை பொருந்திய தெய்வத்தை நினைத்து வழிபடுவார்கள்

இல்லங்களில் தெய்வம் உறைவதை,

**"அணங்கு வழங்கும் அகல் ஆங்கண்"** **(மதுரைக். 164)**

என்னும் அடியில், தெய்வங்கள் வாழ்ந்து அருள் நிரம்பியிருந்த ஊர் இடங்களில் எல்லாம் வருத்தம் கொண்டிருக்கும் பெண்கள் தங்களின் வீட்டுக் கதவருகே இருந்து அழுது கொண்டிருந்தனர்.

**"மணம் புணர்ந்து ஓங்கிய அணங்குடை நல்லில்"** **(மதுரைக். 578)**

என்றும், அரண்மனையின் வாயில் நிலைகளில் தெய்வம் (அ) அணங்கு உறைவதை,

**"தொல்வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை**
**தெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்"** **(மதுரைக். 352 - 353)**

என்னும் பாடலடிகளின் வழி அறியலாம்.

அணங்குகள் இயற்கையிலுள்ள மலைகள், வனங்கள், நீர்நிலைகள், கடம்பு, யாழ், சுரவு, யானை மத்தகம், இல் (அ) இல்லம், பெண்களின் மார்பு போன்ற செழிப்பான இடங்களில் உறைந்திருந்தாக நம்பினர்.

### ஊர்களில் உறையும் தெய்வம்

சங்க கால மக்கள் தாங்கள் வாழும் ஊர்களிலுள்ள சதுக்கங்களிலும், சந்திகளிலும், எல்லோரும் கூடும் மன்றங்களிலும், வாழும் இல்லங்களிலும் தெய்வங்கள் இருக்கும் இடமாக எண்ணி வணங்கி வந்தனர் என்பதை,

**"சதுக்கமும் சந்நியும் புதுப் பூங்கடம்பும்**
**மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையிலும்"** **(திருமுருகு. 225 – 226)**

என்ற பாடலடிகளால் காணலாம். சதுக்கம் என்பது நான்கு தெருக்கள் கூடுமிடமாகும், சந்தி என்பது முச்சந்திகளைக் குறிக்கக் கூடிய இடமாகும். ஊருக்கு நடுவில் எல்லோரும் வந்து கூடுவதற்கு பயன்படும் மரத்தடியே மன்று (அ) மன்றம் எனப்படும். இந்த மன்றம் அந்தந்த ஊர்களில் ஊருக்கு நடுவில் செழித்து வளர்ந்திருக்கும்.

பொதியில் என்பது ஊருக்குப் பொதுவாக கட்டிடம், அந்த ஊர் அம்பலத்தின் அமைப்பு சித்திர வேலைப்பாடுகளுடன் அமைந்தலை ஆகும். அக்காலத்தில் கற்களில் தெய்வத்தை நிறுத்தி வழிபட்டு வந்தள்ளார்.

பொதியில் எனப்பட்ட மன்றங்களில் ஒரு மெடையில் இது போன்ற கந்துகள் இருந்துள்ளன. சங்க காலத்தில் கொண்டி மகளிர் குளிர்ந்த நீரிற் படிந்து மன்றத்தினை மெழுகுவர். அந்திக் காலத்தில் மகளிர் மலரால் அணி செய்து, விளக்கு ஏற்றுவர். இதனை,

**"கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி**
**அந்தி மாட்டிய நந்தா விளக்கின்**
**மலரணி மெழுக்கும் ஏறிப்பலர் தொழ**
**வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்"** **(பட்டினப். 246 – 249)**

என்னும் பட்டினப்பாலை பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன.

ஊர்களில் இருக்கும் அம்பலங்கள் பாழாயினமையால் அங்கே குடி கொண்டு இருந்த தெய்வங்கள் இடம் பெயர்ந்து வேறு இடத்திற்கு சென்றன. இதனை,

**"கலிகெழு கடவுள் கந்தம் கைவிடப்**
**பலிகண் மாறிய பாழ்படு பொதியில்"** **(புறம். 52 : 12 – 13)**

என்னும் பாடலடிகளில், 'கந்து' தெய்வம் உறையும் இடமாக வணங்கப்பட்டு வந்ததை அறியலாம்.

### முடிவுரை

தெய்வத்தைப் போற்றுவது என்பது அச்சத்தால் ஏற்பட்ட ஒன்று. தகாத செயல் செயல்பவரையும், தீய செயல்களைச் செய்வதையும் தெய்வம் வருத்தும் என்று நம்பினர். இதனால் தான் அச்சம் தரும் கடவுள்களாகிய அணங்கு, சூர், கொற்றவை முதலிய பெயர்களால் அழைக்கப்பட்ட தெய்வங்களுக்கு வழிபாட்டிடங்களை வகுத்து வணங்கி வந்துள்ளதை அறிய முடிகின்றது. வீரமும், வெற்றியும் எவ்வகையில் ஒன்றுபட்டிருந்தன என்பதற்குக் கொற்றவை வழிபாடு உதாரணமாகத் திகழ்கிறது.

## துணை நூற்பட்டியல்


1. வி, நாகராசன். *குறுந்தொகை மூலமும் உரையும்*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
2. ரா, சீனிவாசன். *சீவகசிந்தாமணி, உரைநடை*. சென்னை, தமிழ் விக்கி மீடியா, 2015.
3. புலியூர் கேசிகன். *சிலப்பதிகாரம்*. சென்னை, கிழக்கு பதிப்பகம், 2002.
4. புலியூர் கேசிகன். *மணிமேகலை*. சென்னை, கிழக்கு பதிப்பகம், 2002.
5. வி, நாகராசன். *கலித்தொகை மூலமும் உரையும்*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
6. கதிர் முருகு. *குறிஞ்சிப்பாட்டு*. சென்னை, ஶ்ரீ செண்பகா பதிப்பகம், 2003.
7. இரா, செயபால். *அகநானூறு மூலமும் உரையும்*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
8. குவெ, பாலசுப்பிரமணியம். *புறநானூறு மூலமும் உரையும்*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
9. அ, தட்சிணாமூர்த்தி. *ஐங்குறுநூறு மூலமும் உரையும்*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
10. அ, ஆலிஸ். *பதிற்றுப்பத்து மூலமும் உரையும்*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
11. பெ, சுப்பிரமணியன். *பரிபாடல் மூலமும் உரையும்*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
12. பொ வே, சோமசுந்தரனார். *பெரும்பாணாற்றுப்படை*. சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1997.
13. உவே, சாமிநாதையர். *பெருங்கதை*. சென்னை, சாமிநாதையர் நூல்நிலையம். 1997.
14. வரதராஜன். *தமிழரின் ஒப்பனை கலைத்திறன்*. தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம், 2000.
15. உ, கருப்புத் தேவன். *தமிழும் பிற துறைகளும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2002.


## References


1. V, Nagarasan. *Kurundogai source and text*. Chennai, New Century Book House, 2004.
2. R, Srinivasan. *Sivakachintamani, Prose*. Chennai, Tamil Wiki Media, 2015.
3. Puliyur Kesikan. *Silapathikaram.* Chennai, Eastern Publishing House, 2002.
4. Puliyur Kesikan. *Manimegalai*. Chennai, Eastern Publishing House, 2002.
5. V, Nagarasan. *Kalithogai sources and texts of studies*. Chennai. New Century Book House Private Limited, 2004.
6. Kathir Muruku. *Kurinchipattu*. Chennai, Sri Senpaha Publishing House, 2003.
7. R, Jeyapal. *Agananuru source and text*. Chennai, New Century Book House, 2004.
8. GV, Balasubramanian. *Purananuru source and text*. Chennai, New Century Book House, 2004.
9. A, Dakshinamurthy. *Ainkurunuru source and text*. Chennai, New Century Book House, 2004.
10. A, Alice. *Patirruppattu source and text*. Chennai. New Century Book House, 2004.
11. P, Subramanian. *Paripatal source and text*. Chennai, New Century Book House, 2004.
12. P V, Somasundranaar. *Perumpanarruppatai*. Chennai, Saiva Siddhanta Works Publishing Society, 1997.
13. *UV, Saminathaiyar. Perungathai*. Chennai, Saminathayar Library, 1997.
14. Varadarajan. Tamil's Makeup Artistry. Thanjavur, Tamil University, 2000.
15. U, Karuput Devan. Tamil and other departments, Chennai, New Century Book House, 2002.



**How to cite this article:** S, Manimegalai. "Places of worship in Tenth". *Aazhi International Journal of Tamil Literature Studies*, vol. 1, no. 2, June 2023, pp. 12-16, https://aijtls.com/index.php/aijtls/article/view/16.



This is an open access journal, and articles are distributed under the terms of the Creative Commons Attribution-Non Commercial-ShareAlike 4.0 International License, which allows others to remix, tweak, and build upon the work non-commercially, as long as appropriate credit is given and the new creations are licensed under the identical terms.